*2017 ஜூன் 29*] [பேரவைத் தலைவர்]

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

## (ஆ) தமிழ்நாடு திருமணங்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு) திரு. முஹம்மது அபூபக்கர், என்ன? சட்டமுன்வடிவை அறிமுக நிலையில் எதிர்க்கிறீர்களா? சொல்லுங்கள்.*

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவிலே சில விளக்கங்களை மட்டும் நான் ஏற்கெனவே எழுதிக் கொடுத்திருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *விளக்கமெல்லாம் ஒன்றுமில்லை. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை அறிமுகம்தான் செய்கிறார். நீங்கள் அறிமுக நிலையில் ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா என்பதை மட்டும் சொல்லுங்கள். அதை நான் பதிவு செய்துகொள்கிறேன். பின்னர், அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது, நீங்கள் பேசுங்கள்.*

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மேற்படி சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அவ்வளவுதான். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கெல்லாம் division ஒன்றும் கிடையாது, பேசாமல் இருங்கள்.

## 8. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

### (அ) கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

### (ஆ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

———